# معنى لا إله إلا الله

# லா இலாஹ இல்லல்லாஹ் என்பதன் விளக்கம்

# Meaning of La Ilaha Illa Allah

SALAFI CALL
The islamic audios

بِسۡمِ ٱللَّهِ ٱلرَّحۡمَٰنِ ٱلرَّحِيمِ

# معنى لا إله إلا الله

மஅனா லா இலாஹ இல்லல்லாஹ்

# லா இலாஹ இல்லல்லாஹ் என்பதன் விளக்கம்


**ஆசிரியர்:**

**ஷெய்குல் இஸ்லாம் முஹம்மது இப்னு அப்துல் வஹ்ஹாப் ரஹிமஹுல்லாஹ்**

**விளக்கவுரை:**

**அபூ அப்திர் ரஹ்மான் நவ்வாஸ் அல் ஹிந்தி அஸ் ஸெய்லானி ஹபிழஹுல்லாஹ்**

**தொகுப்பு:**

**அபூ ஆஇஷா அப்துல்லாஹ் அல் ஹிந்தி வப்பகஹுல்லாஹ்**


**பாடம்: 01 - 03**

# முன்னுரை

ஷெய்குல் இஸ்லாம் முஹம்மது இப்னு அப்துல் வஹ்ஹாப் ரஹிமஹுல்லாஹ் அவர்களின் வரலாறு. (சுருக்கம்)

ஷெய்குல் இஸ்லாம் முஹம்மது இப்னு அப்துல் வஹ்ஹாப் ரஹிமஹுல்லாஹ் அவர்கள் ஹிஜ்ரி 1115 ஆம் ஆண்டு பிறந்தார்கள்.

ஷெய்க் அவர்களின் (குன்யா) புனைப்பெயர் அபூ அப்தில்லாஹ் அல்லது அபுல் ஹுசைன்.

இமாமவர்கள் இன்றைய சஊதி அரேபியாவில் உள்ள நஜ்து பகுதியில் பிறந்தார்கள். நஜ்து என்பது தற்பொழுது சவூதி அரேபியாவில் உள்ள ரியாத் ஆகும். அதனால் தான் இமாம் அவர்களின் பெயர் முஹம்மது இப்னு அப்துல் வஹ்ஹாப் அந் நஜ்தி அத் தமீமி என்று அழைக்கப்படுகிறது.

இமாமவர்கள் சஊதி அரேபியாவில் ஷிர்க் நிறைந்திருந்த காலகட்டத்தில் தவ்ஹீதை புதுப்பித்து தவ்ஹீதை நிலைநாட்டினார்கள். அதன் பிறகு இந்த தஃவா சஊதியிலிருந்து இந்தியா இலங்கை உட்பட உலகம் முழுக்க பரவியது. இத்தகைய தவ்ஹீத் அடிப்படையிலான தஃவா பரவிய போது அதைப் பொறுத்துக் கொள்ள முடியாத சூஃபியாக்கள் இதற்கு (வஹ்ஹாபிசம்) என்று பெயர் வைத்தனர்.

நஜ்து பகுதியின் ஆட்சியாளராக இருந்த முஹம்மது இப்னு சஊது ரஹிமஹுல்லாஹ் அவர்கள் இமாம் முஹம்மது இப்னு அப்துல் வஹ்ஹாப் ரஹிமஹுல்லாஹ் அவர்களுடைய தஃவாவிற்கு உற்சாகம் கொடுத்து உதவி செய்து தவ்ஹீதை நிலைநாட்டினார்கள். ஆட்சியாளர் முஹம்மது இப்னு சஊது அவர்களுக்குப் பிறகு அவர்களது சந்ததியினர்கள் தவ்ஹீதை நிலைநாட்டினார்கள்.

இமாம் முஹம்மது இப்னு அப்துல் வஹ்ஹாப் ரஹிமஹுல்லாஹ் பனூ தமீம் கோத்திரத்தை சார்ந்தவர் ஆவார்.

அல்லாஹ் சுப்ஹானஹூ வ தஆலா கூறுகிறான்:

وَجَعَلْنَٰكُمْ شُعُوبًا وَقَبَآئِلَ لِتَعَارَفُوٓا۟

ஒருவர் மற்றவரை அறிந்துகொள்ளும் பொருட்டு, உங்களைக் கிளைகளாகவும் கோத்திரங்களாகவும் ஆக்கினோம். அல்குர்ஆன் 49:13

இமாமவர்களுடைய சந்ததியில் வரக்கூடிய உலமாக்களை ஆலுஷ்ஷெய்க் என்று அழைக்கப்படுகிறார்கள். இமாம் அவர்களின் சந்ததியில் வந்தவர்கள் ஆலிம்களாக உருவாகி புத்தகங்களையும் எழுதியுள்ளார்கள். இமாம் அவர்களுக்கு அப்துல்லாஹ், அலி, சுலைமான், இப்ராஹிம், ஹுஸைன், ஹஸன் என்று ஆறு மகன்கள் இருந்தனர்; அவர்களில் சிலர் பெரும் ஆலிம்களாகவும் இருந்தனர். மேலும் இமாம் அவர்களுக்கு நான்கு மகள்களும் இருந்தனர். ரஹிமஹுமுல்லாஹ். இமாம் அவர்களின் பேரன் அப்துர்ரஹ்மான் இப்னு ஹஸன் இப்னு முஹம்மது இப்னு அப்துல் வஹ்ஹாப் ரஹிமஹுல்லாஹ் அவர்கள் ஃபத்ஹுல் மஜீத் என்ற சிறப்பான புத்தகத்தை எழுதிய மாபெரும் இமாம் ஆவார்கள். தற்போது சஊதி அரேபியாவின் முப்தியாக இருப்பவரும் அல் இமாம் முஹம்மது இப்னு அப்துல் வஹ்ஹாப் ரஹிமஹுல்லாஹ் அவர்களின் பரம்பரையை சார்ந்த ஷெய்க் அப்துல் அஸீஸ் ஆலுஷ்ஷெய்க் ஹபிழஹுல்லாஹ் ஆவார்கள். இவ்வாறாக ஹிஜ்ரி பன்னிரண்டாம் நூற்றாண்டு தொடங்கி தற்போதுள்ள ஹிஜ்ரி 15ஆம் நூற்றாண்டு வரை இமாமவர்களின் சந்ததியிலிருந்து உலமாக்கள் வந்துகொண்டே இருக்கிறார்கள்.

முஹம்மது இப்னு சஊது ரஹிமஹுல்லாஹ் அவர்களின் சந்ததியில் வரக்கூடியவர்களை ஆலு சஊத் என்று அழைக்கப்படுகிறார்கள். மன்னர் அப்துல் அஸீஸ், ஃபஹத், ஃபைஸல், அப்துல்லாஹ் உட்பட கடந்த 12ம் நூற்றாண்டிலிருந்து இன்று வரை இவரது பரம்பரையை சார்ந்தவர்கள் தான் சஊதி அரேபியாவின் ஆட்சியாளராக இருக்கிறார்கள்.

அல் இமாம் முஹம்மது இப்னு அப்துல் வஹ்ஹாப் ரஹிமஹுல்லாஹ் அவர்கள் மக்களை தவ்ஹீதின் பக்கம் அழைத்தார்கள். தவ்ஹீது இல்லாத வணக்க வழிபாடுகள் ஏற்றுக்கொள்ளப்படாது என்பதை மக்களுக்கு விளக்கினார்கள். இமாமவர்கள் மக்கா, மதினா, ஈராக் போன்ற இடங்களுக்கு சென்று உலமாக்களிடம் உட்கார்ந்து கல்வி பயின்றார்கள். முஹம்மது ஹயாத் அஸ் ஸிந்தி; அப்துல்லாஹ் இப்னு இப்ராஹிம் போன்ற மக்கா மதினாவில் இருந்த பல்வேறு ஆலிம்களிடம் கல்வியை கற்றுக் கொண்டார்கள். அதேபோன்று ஈராக்கில் பஸரா பாக்தாத் ஆகிய நகரங்களில் இருந்த உலமாக்களிடமிருந்தும் கல்வியை எடுத்துக் கொண்டார்கள். ரஹிமஹுமுல்லாஹ். அதேபோன்று கல்வியைத் தேடி ஷாம் தேசத்திற்கு இமாம் அவர்கள் சென்ற பொழுது வழிப்பறிக் கொள்ளையர்கள் இமாம் அவர்களை தாக்கி அவர்களிடம் இருந்த பொருட்களை எடுத்துக் கொண்டனர் இதனால் இமாம் அவர்களால் ஷாம் தேசத்திற்கு சென்று கல்வி தேட முடியவில்லை.

இமாம் அவர்களுடைய பாட்டன்மார்களின் பரம்பரை ரசூலுல்லாஹ் ﷺ அவர்களின் பரம்பரையோடு சென்று சேர்கிறது. சுமார் 30 பாட்டன்மார்களுக்கு முன்பு இமாம் அவர்களுடைய பாட்டனும் நபி ﷺ அவர்களுடைய பாட்டனும் ஒன்றாகும்.

இந்தியா உட்பட உலகின் பல்வேறு பகுதிகளை சார்ந்த மாணவர்கள் இமாம் அவர்களிடமிருந்து கல்வி பயின்று சென்றுள்ளார்கள்.

இமாம் அவர்கள் தன்னுடைய 91 வது வயதில், ஹிஜ்ரி 1206 ஆம் ஆண்டு இறந்தார்கள். இமாமவர்கள் நிறைய புத்தகங்களையும், உலமாக்களையும் மாணவர்களையும் விட்டுச் சென்றார்கள். இது அல்லாஹ் சுபஹானஹு வ தஆலா இமாம் அவர்களுக்கு செய்த பரக்கத் ஆகும்.

## அல் இமாம் அல் முஜத்திது முஹம்மது இப்னு அப்துல் வஹ்ஹாப் ரஹிமஹுுல்லாஹ் அவர்களின் த:’வாவின் தனித்துவமும்; இமாமவர்கள் எழுதிய புத்தகங்களின் முக்கியத்துவமும்:

இமாம் முஹம்மது இப்னு அப்துல் வஹ்ஹாப் ரஹிமஹுுல்லாஹ் அவர்கள் தவ்ஹீதை பரப்புவதற்கு கடுமையாக பாடுபட்டார்கள். இமாம் அவர்கள் மேற்கொண்ட தவ்ஹீது அடிப்படையிலான தஃவா என்பது (PJ) பிஜே அல்லது ஜமாதுத் தவ்ஹீது போன்ற வழிகெட்ட கூட்டங்களைப் போல் அல்லாமல் உண்மையான தவ்ஹீதை பரப்புவதாக இருந்தது.

இமாமவர்கள் சஊதி அரேபியாவில் ஷிர்க் நிறைந்திருந்த காலகட்டத்தில் தவ்ஹீதை புதுப்பித்து; தவ்ஹீதின் பக்கம் மக்களை அழைத்து; தவ்ஹீதை நிலைநாட்டினார்கள். தவ்ஹீது இல்லாத வணக்க வழிபாடுகள் ஏற்றுக்கொள்ளப்படாது என்பதை மக்களுக்கு விளக்கினார்கள். அதன் பிறகு இந்த தஃவா சஊதியிலிருந்து இந்தியா இலங்கை உட்பட உலகம் முழுக்க பரவியது.

சமகாலத்தில் வாழ்ந்து மறைந்த அஷ்ஷெய்க் இப்னு பாஸ், அஷ்ஷெய்க் இப்னு உஸைமீன் ரஹிமஹுமுல்லாஹ் போன்றவர்களும்; அதேபோல் தற்போது வாழ்ந்து கொண்டிருக்கும் அஷ்ஷெய்க் ஸாலிஹ் அல் ஃபவ்ஸான், அஷ்ஷெய்க் அப்துல் அஸீஸ் ஆலுஷ்ஷெய்க், அஷ்ஷெய்க் அப்துல் முஹ்ஸின் அல் அப்பாத் உட்பட மற்ற உலமாக்களும் (ஹபிழஹுமுல்லாஹ்) இமாம் அவர்களின் புத்தகங்களை பாடங்களாக நடத்தி வருகின்றனர். ஏனெனில் இமாம் அவர்களின் புத்தகங்கள் அந்த அளவிற்கு முக்கியத்துவம் வாய்ந்த புத்தகங்களாக இருக்கின்றன.

இமாமவர்கள் அவர்கள் எழுதிய ஸலாஸத்துல் உஸூல், உஸூலுஸ் ஸித்தா, கஷ்புஷ் ஷுபுஹாத், கிதாபுத் தவ்ஹீத், மஸாயிலுல் ஜாஹிலியா போன்ற சிறிய புத்தகங்கள் மக்களுக்கு மிகப் பெரிய பலன் தரக்கூடியதாக இருப்பதால் பெரிய உலமாக்கள் இந்த புத்தகங்களுக்கு நீண்ட விளக்க உரை கொடுத்துள்ளார்கள்.

## ரப்பானி என்பவர் யார்?

உலமாக்கள் முஃப்தி என்ற உயர்ந்த நிலையை அடைந்தாலும் கூட மக்கள் புரிந்து கொள்ள சிரமமாக இருக்கும் பெரிய புத்தகங்களை பாடமாக எடுப்பதைவிட மக்களுக்கு பயன் தரக்கூடிய, மக்களின் அறிவுக்கு தகுந்த புத்தகங்களை கற்றுக் கொடுக்க வேண்டும். இதுதான் ரப்பானியுடைய பண்பாகும்.

ரப்பானியுடைய பண்பை குறித்து இமாம் புகாரி ரஹிமஹுல்லாஹ் கூறும் பொழுது:

الرَّبَّانِيُّ الَّذِي يُرَبِّي النَّاسَ بِصِغَارِ الْعِلْمِ قَبْلَ كِبَارِهِ.

யாரெல்லாம் மக்களுக்கு பெரிய விஷயங்களை கற்றுக் கொடுப்பதற்கு முன்பாக முக்கியத்துவம் வாய்ந்த சிறிய விஷயங்களை கற்றுக் கொடுக்கிறாரோ அவர்தான் ரப்பானி ஆவார். (நூல்: ஸஹீஹுல் புகாரி, பாபுல் இல்ம்.)

அல்லாஹ் ஸுபஹானஹு வ தஆலா கூறுகிறான்:

وَلَٰكِن كُونُواْ رَبَّٰنِيِّـۧنَ

நீங்கள் ரப்பானியூன்களாக இருந்து கொள்ளுங்கள். (குர்ஆன் 3: 79)

ஆகவே, ரப்பானி என்பவர் மக்களுக்கு கல்வியை கற்றுக் கொடுப்பவர் ஆவார். (PJ) பிஜே, யஹ்யா சில்மி போன்று பெரிய விஷயங்களை முன்வைத்து மக்களை குழப்பாமல்; மக்களுக்கு தேவையான அடிப்படை கல்வியை கொஞ்சம் கொஞ்சமாக கற்றுக் கொடுக்க வேண்டும்.

## சத்தியத்தை மறைக்க கூடாது! பொய்யர்களிடமிருந்து கல்வியை எடுக்கவும் கூடாது!

உலமாக்கள் உடைய ஃபத்வாவை மறைத்து வைக்க கூடாது. உண்மையை சொல்வதால் பிரச்சினை வராது மாறாக உண்மையை மறைப்பதால் தான் பிரச்சனை ஏற்படும். அதேபோன்று உண்மையை சொல்வதால் பிரச்சினை வரும் என்ற காரணத்தினால் உண்மையை மறைக்க கூடாது. உண்மையை சொல்வதனால் சிலருக்கு எரிச்சல் வரத்தான் செய்யும், ஆனால் அதற்காக சத்தியத்தை மறைத்து வைக்க கூடாது. ஏனெனில் இது அல்லாஹ்வுடைய தீன்.

இமாம் இப்னு ஸீரீன் ரஹிமஹுல்லாஹ் கூறினார்கள்:

إِنَّ هَذَا العِلْمَ دِيْنٌ؛ فَانْظُرُواْ عَمَّنْ تَأْخُذُوْنَ دِيْنَكُمْ (أخرجه مسلم في مقدمة صحيحه)

நிச்சயமாக இந்த இல்ம் (மார்க்க அறிவு) என்பது தீன் ஆகும். நீங்கள் யாரிடம் இருந்து உங்களது தீனை எடுக்கிறீர்கள் என்பதை பார்த்துக்கொள்ளுங்கள். (நூல்: ஸஹீஹ் முஸ்லிம் முன்னுரை)

எனவே பொய்யர்களிடமிருந்து கல்வியை எடுக்க முடியாது.

الحمد لله والصلاة والسلام على نبيه

سئل الشيخ عن معنى لا إله إلا الله، فأجاب بقوله. اعلم رحمك الله أنّ هذه الكلمة هي الفارقة بين الكفر والإسلام.

**ஷெய்குல் இஸ்லாம் முஹம்மது இப்னு அப்துல் வஹ்ஹாப் ரஹிமஹுல்லாஹ் அவர்களிடம் - லா இலாஹ இல்லல்லாஹ் - என்பதன் பொருள் என்ன? என்று கேட்கப்பட்டது.**

அதற்கு இமாம் அவர்கள், "அல்லாஹ் உனக்கு (ரஹ்மத்) கருனை செய்வானாக, அறிந்துகொள்! இது ஒரு வார்த்தையாகும்; இந்த வார்தையானது (குஃப்ரு) நிராகரிப்பிற்கும் , இஸ்லாத்திற்கு மத்தியில் பிரிவினையை ஏற்படுத்தும் ஒரு வார்தையாகும்" என்று கூறினார்கள்.

எனவே, இஸ்லாத்திற்கும் (குஃப்ரு) நிராகரிப்பிற்கும் பிரிவை தெளிவுபடுத்தும் ஒரு வார்தைதான் 'லா இலாஹ இல்லல்லாஹ்' என்பதாகும்.

'லா இலாஹ இல்லல்லாஹ்' என்பதன் பொருள் என்ன?

உண்மையாக வணக்கத்திற்கு தகுதி வாய்ந்தவன் அல்லாஹ் ஒருவன் மட்டுமே வணக்கத்தில் அவனுக்கு இணை ஏதும் இல்லை என்பதுதான் சரியான பொருளாகும்.

لا (லா) - இல்லை

إله (இலாஹ) - உண்மையாக வணக்கத்திற்கு தகுதி வாய்ந்த நாயன்

إلا (இல்லா) - தவிர

الله - அல்லாஹ்

لا إله (லா இலாஹ) - உண்மையாக வணக்கத்திற்கு தகுதி வாய்ந்த நாயன் யாரும் இல்லை

إلا الله (இல்லல்லாஹ்) - அல்லாஹ்வைத் தவிர

இதில் إله (இலாஹ்) என்பதற்கு 'வணக்கத்திற்கு தகுதியானவன்' என்றுதான் அர்த்தம். ஆனால் 'உண்மையாக' என்ற வார்த்தையை கூடுதலாக சேர்த்து 'உண்மையாக வணக்கத்திற்கு தகுதியானவன்' என்று கூறப்படுவதற்கான காரணம், அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா கூறுகிறான்:

ذٰ لِكَ بِاَنَّ اللّٰهَ هُوَ الْحَـقُّ وَاَنَّ مَا يَدْعُوْنَ مِنْ دُوْنِهٖ هُوَ الْبَاطِلُ وَاَنَّ اللّٰهَ هُوَ الْعَلِىُّ الْكَبِيْرُ

இதன் காரணமாவது: நிச்சயமாக அல்லாஹ் அவன் தான் உண்மையானவன் (சத்தியமானவன்). நிச்சயமாக அவர்கள் அல்லாஹ்வையன்றி (இறைவனென) அழைப்பவை அனைத்தும் பொய்யானவைதான். நிச்சயமாக அல்லாஹ்தான் உயர்ந்தவன், (மேலானவன்,) மகா பெரியவன். (அல்குர்ஆன் 22: 62)

உண்மையான (சத்தியமான) வணக்க வழிபாடுகளுக்கு தகுதியானவன் அல்லாஹ் என்று குர்ஆனில் குறிப்பிடப்பட்டுள்ளதால், மேற்கண்ட குர்ஆன் வசனத்தை ஆதாரமாகக் கொண்டு إله (இலாஹ) என்பதற்கு உண்மையாக வணக்கத்திற்கு தகுதியானவன் என்ற விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளது.

அதேபோன்று அல்லாஹ்வை அன்றி வணங்கப்படுபவை அனைத்தும் பொய்யானவை; அதற்கு செய்யப்படும் வணக்க வழிபாடுகளும் போலியானவை ஆகும் என்று அல்லாஹ் தெளிவாக மேற்கண்ட குர்ஆன் வசனத்தில் குறிப்பிட்டுள்ளான்.

எனவே, "உண்மையாக வணக்கத்திற்கு தகுதியானவன்" என்பதே إله (இலாஹ) என்பதற்கான சரியான விளக்கமாகும்.

கலிமா என்பதற்கு இங்கு சொல் என்று பொருள் இல்லை மாறாக வசனம் என்று பொருளாகும்.

**எனவே; لا إله إلا الله [#லாஇலாஹஇல்லல்லாஹ்] என்ற இந்த வசனம் முஸ்லிம்களையும் கா:பிர்களையும் பிரித்து வைக்க கூடியதாக இருக்கிறது.**

அதேபோன்றுதான் இந்த வசனமானது இஸ்லாத்தையும் ஏனைய அனைத்து மதங்களையும், கொள்கைகளையும் பிரித்துக் காட்டக் கூடியதாகவும் இருக்கிறது. இந்த வசனத்தின் மூலமாகத்தான் எங்களுக்கும் அவர்களுக்கும் இடையே பிரிவு வருகின்றது.

இந்த வசனத்தை வைத்து தான் மனிதர்களை நாங்கள் நேசிக்கவும் செய்கிறோம்; மனிதர்களை வெறுக்கவும் செய்கின்றோம்.

யாரெல்லாம் இந்த வசனத்துடைய பொருளுக்கு வழிப்பட்டு நடந்து அதை நிலைநாட்டுகிறாரோ அவர்களை நேசிப்பது கட்டாயக் கடமையாகும்.

அதேபோன்று யாரெல்லாம் இந்த வசனத்தின் பொருளுக்கு எதிராக செயல்படுகிறார்களோ அவர்களை வெறுப்பதும் எங்கள் மீது கட்டாயக் கடமையாகும்.

ஏனெனில் இந்த வசனம் எங்களையும் அவர்களையும் பிரிக்கின்றது. இத்தகைய வசனத்தைத் தான் அனைத்து இறைத்தூதர்களும் கொண்டு வந்தார்கள். அல்லாஹ் ஸுபஹானஹு வ தஆலா கூறுகிறான்:

وَلَـقَدْ بَعَثْنَا فِىْ كُلِّ اُمَّةٍ رَّسُوْلًا اَنِ اعْبُدُوا اللّٰهَ وَاجْتَنِبُوا الطَّاغُوْتَ‌ۚ

(பூமியின் பல பாகங்களிலும் வசித்திருந்த) ஒவ்வொரு வகுப்பினருக்கும் நிச்சயமாக நாம் தூதரை அனுப்பியிருக்கிறோம். (அத்தூதர்கள்

அவர்களை நோக்கி) "அல்லாஹ் ஒருவனை மட்டுமே வணங்குங்கள். (அல்லாஹ் அல்லாத மற்ற போலியான வணக்க வழிபாடுகள் மற்றும் கடவுள்களான) தாகூத்தை விட்டும் விலகிக் கொள்ளுங்கள் என்(று கூறிச் சென்)றார்கள். (அல்குர்ஆன் 16: 36)

இதுதான் நபிமார்களுடைய, ரசூல்மார்களுடைய அழைப்பாக இருந்தது. அனைத்து நபிமார்களும் ரசூல்மார்களும் 'லா இலாஹ இல்லல்லாஹ்' என்ற வசனத்தின் பக்கம்தான் மக்களை அழைத்தார்கள். அதேபோன்று நமது இறுதித் தூதரான முஹம்மது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய அழைப்பும் இதுவாகத்தான் இருந்தது.

## முஹம்மது நபி ﷺ அவர்கள் 'லாஇலாஹாஇல்லல்லாஹ்' ஏற்றுக்கொள்ளுமாறு மக்களை அழைத்தார்கள்.

அன்றைய குரைஷி முஷ்ரிகீன்களிடம் முஹம்மது ﷺ கூறினார்கள்:

قُولُوا : لَا إِلَهَ إِلَّا اللَّهُ ؛ تُفْلِحُوا

லா இலாஹா இல்லல்லாஹ் என்று கூறுங்கள் நீங்கள் வெற்றி பெறுவீர்கள். (முஸ்னத் அஹ்மது 16023)

எனவே 'லா இலாஹா இல்லல்லாஹ்' என்ற வசனத்தை உறுதியுடன் நம்பிக்கை கொண்டு கூறினால் அல்லாஹ் உங்களுக்கு வெற்றி அளிப்பான் என்று நபி ﷺ அவர்கள் கூறிய போது, 'லா இலாஹ இல்லல்லாஹ்' என்பதுடைய சரியான விளக்கத்தை அறிந்திருந்த குரைஷி முஷ்ரிகீன்கள் அதை சொல்ல மறுத்துவிட்டார்கள்.

'லா இலாஹ இல்லல்லாஹ்' என்பதுடைய சரியான விளக்கத்தை அறியாத முஸ்லிம்கள் இன்று; அல்லாஹ் அல்லாதவைகளுக்கு நேர்ச்சை செய்கின்றார்கள்; ஜின்களுக்கு குர்பானி கொடுக்கின்றார்கள், கப்ருகளை வைத்து வணங்குகிறார்கள். ஆனால் இது போன்ற காரியங்கள் 'லா இலாஹ இல்லல்லாஹ்' என்ற வசனத்திற்கு முரணானது என்பதை

அறிந்ததால் தான் இத்தகைய செயல்பாடுகளை செய்துவந்த அன்றைய காலத்து குரைஷி முஷ்ரிகீன்கள் 'லா இலாஹ இல்லல்லாஹ்' என்பதை ஏற்க மறுத்தார்கள்.

எனவேதான், சிலைகளை வணங்க வேண்டாம் கப்ருகளில் இருக்கும் நல்லடியார்களை வணங்க வேண்டாம் என்று நபி ﷺ கூறிய போது, குரைஷி முஷ்ரிகீன்கள் அதை ஏற்க மறுத்து, "நாம் சிலைகளை வணங்குவது எம்மீதுள்ள கடமை. ஏனெனில் நாம் பாவசாலிகளாக இருக்கின்றோம். அல்லாஹ்வை எங்களால் இந்நிலையில் நேரடியாக நெருங்க முடியாது மாறாக அந்த சிலைகளை வைத்து தான் நாங்கள் அல்லாஹ்வை நெருங்க முடியும்" என்று அவர்கள் கூறினார்கள். இது தான் ஷிர்க்.

இந்த ஷிர்க் -ஐ தான் இன்று, முஸ்லிம் என்ற பெயரை வைத்துக்கொண்ட பலர் செய்கிறார்கள்.

## லா இலாஹ இல்லல்லாஹ் என்ற வசனத்தை முன்வைத்து முஹம்மது நபி ﷺ மக்களுக்கு மத்தியில் பிரிவினையை ஏற்படுத்தினார்கள்

நபி ﷺ அவர்கள் கூறினார்கள்:

مُحَمَّدٌ ﷺ فَرْقٌ بَيْنَ النَّاسِ صحيح البخاري، الجزء رقم :9، الصفحة رقم:93

(7281)

முஹம்மது ﷺ மக்களுக்கு மத்தியில் பிரிவினை ஏற்படுத்தினார் (நூல்: புகாரி 7281)

முஹம்மது நபி ﷺ மக்களை மார்க்கத்தின் அடிப்படையில் முஸ்லிம்கள் என்றும் காஃபிர்கள் என்றும் பிரித்து வைத்தார்கள். தவ்ஹீதை அடிப்படையாகக் கொண்டு இஸ்லாத்தையும் ஏனைய பிற மதங்களையும் முஹம்மது நபி ﷺ பிரித்து காட்டியதால் தான்

مُحَمَّدٌ ﷺ فَرْقٌ بَيْنَ النَّاسِ

"முஹம்மது நபி ﷺ மக்களுக்கு மத்தியில் பிரிவினை ஏற்படுத்தினார்" என்று கூறப்பட்டது.

எனவே சத்தியத்தில் இருப்பவர்கள் யார் அசத்தியத்தில் இருப்பவர்கள் யார் என்பதை பிரித்து தெளிவுபடுத்த வந்தவர் தான் முஹம்மது நபி ﷺ அவர்கள்.

அதேபோன்று சத்தியம் வரும்பொழுது நிச்சயமாக பிரிவினை ஏற்பட்டே தீரும் என்பதை நாம் விளங்கிக் கொள்ள வேண்டும். அனைவரையும் ஒன்று சேர்த்துக் கொண்டு இது தான் என்று தீன் (மார்க்கம்) என்று செயல்பட முடியாது. இவ்வாறு செயல்படுவது தீன் (மார்க்கம்) ஆகாது. யாரெல்லாம் அந்த தீனை உறுதியாக படித்து, கடைப்பிடித்து வருகின்றார்களோ அப்பொழுதுதான் அந்த மார்க்கம் (தீன்) அவர்களை ஒன்று சேர்க்கும்.

ஒருவர் கிழக்குப் பக்கமும் மற்றொருவர் மேற்கு பக்கமும் சென்றால் எவ்வாறு பிரிவு ஏற்படுமோ அதேபோன்றுதான் நினைத்ததை எல்லாம் தீன் (மார்க்கம்) என்று செய்யும் பொழுது அங்கு ஒற்றுமை ஏற்படாது மாறாக பிரிவுதான் ஏற்படும்.

எனவே சத்தியம் மட்டும் தான் மக்களை ஒன்று சேர்க்கும். எப்பொழுது மக்கள் சத்தியத்தை உறுதியாகப் பற்றிப் பிடித்து; அதை எடுத்து அமல் செய்கிறாரோ அப்பொழுதுதான் அவர்களுக்கு மத்தியில் ஒற்றுமை ஏற்படும். அந்த சத்தியமானது சத்தியத்தில் உள்ளவர்களையும்; போலியான விஷயங்களை எடுத்து நடப்பவர்களையும் தெளிவாக பிரித்துக் காட்டும்.

சத்தியம் வந்தால் எப்படியாவது பிரிவினை வரத்தான் செய்யும். அதனால் தான் நபி ﷺ அவர்களின் காலத்தில் வாழ்ந்த குறைஷிகளின் தந்தைக்கும் மகனுக்கும்; தாய்க்கும் பிள்ளைக்கும்; மேலும் உறவினர்களுக்கு

மத்தியிலும் பிரிவினை வந்தது. இந்தப் பிரிவினை தீன் (மார்க்கம்) அடிப்படையில் ஏற்பட்டதாகும். சத்தியத்தின் அடிப்படையிலான ஏற்பட்ட பிரிவின் விளைவு உறவினர்கள் உறவினர்களுக்கு எதிராக போர் தொடுத்தார்கள். எனவே சத்தியம் வந்தால் எப்படியாவது மக்களுக்கு மத்தியில் பிரிவினை நிச்சயமாக வரும். ஆகவே பிரிவினை ஏற்பட்டாலும் அதைப் பொருட்படுத்தாமல் நாம் சத்தியத்தை ஏற்று நடக்க வேண்டும். இதற்கு முரணாக அசத்தியத்தில் இருக்கும் அனைவரையும் சேர்த்துக்கொண்டு தீனை நிலைநாட்ட முடியாது.

**அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலா குர்ஆனை 'ஃபுர்கான்' என்று கூறுகிறான். அதேபோன்று இந்த தீனுல் இஸ்லாத்தின் மற்றொரு பெயர் தீனுல் ஃபுர்கான் ஆகும்.**

உயர்ந்தோனாகிய அல்லாஹ் கூறுகிறான்:

يٰۤـاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْۤا اِنْ تَتَّقُوا اللّٰهَ يَجْعَلْ لَّـكُمْ فُرْقَانًا وَّيُكَفِّرْ عَنْكُمْ سَيِّاٰتِكُمْ وَيَغْفِرْ لَـكُمْ‌ؕ وَ اللّٰهُ ذُو الْفَضْلِ الْعَظِيْمِ

நம்பிக்கையாளர்களே! நீங்கள் அல்லாஹ்வுக்குப் பயப்படுவீர்களாயின், அவன் உங்களுக்குக் ஃபுர்கானை (சத்தியத்தையும் அசத்தியத்தையும் பிரித்து அறியக் கூடிய அறிவை) வழங்குவான். மேலும், உங்கள் பாவங்களைப் போக்கி உங்களை மன்னித்து விடுவான். ஏனென்றால், அல்லாஹ் மிக மகத்தான அருளுடையவன் ஆவான். (அல்குர்ஆன் 8: 29)

ஃபுர்கான் الفرقان என்ற சொல் ஃபரக فَرَقَ அல்லது ஃபர்ரக فرّق என்ற அடிப்படை சொல்லிலிருந்து வருகிறது. ஃபரக فَرَقَ என்பதற்கு பிரிவினை ஏற்படுத்துதல் என்பது பொருளாகும். எனவே அல்குர்ஆன் என்பது சத்தியத்திற்கும் அசத்தியத்திற்குமிடையே பிரிவினையை ஏற்படுத்தி சத்தியத்தை தெளிவுபடுத்தும் அல்லாஹ்வுடைய பேச்சாகும். முஹம்மது நபி ﷺ அவர்களின் வழிமுறையும் இவ்வாறு தான் இருந்தது.

பிரிவினையை ஏற்படுத்திய ஒரு நபிதான் முஹம்மது நபி ﷺ என்பதை ஆதாரத்துடன் இதற்கு முன்னர் நாம் பார்த்தோம்.

எனவே லாஇலாஹ இல்லல்லாஹ் என்பது சத்தியத்தையும் அசத்தியத்தையும் பிரித்து வைத்து சத்தியத்தின் அடிப்படையில் மக்களை ஒற்றுமைப்படுத்த கூடியதாக இருக்கிறது. சத்தியத்தை படித்து அமல் செய்வதன் மூலமாக மட்டும்தான் மக்களை ஒற்றுமை படுத்த முடியும். அவ்வாறு இல்லாமல் வேறு எந்த வழியில் முயற்சித்தாலும் மக்களை ஒற்றுமைப் படுத்த முடியாது. ஏனெனில் ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாக யோசிக்க கூடியவர்களாக இருக்கின்றார்கள்.

அல்லாஹ் ஸுபஹானஹு வ தஆலா கூறுகிறான்:

أَفَلَا يَتَدَبَّرُوْنَ الْقُرْاٰنَ‌ؕ وَلَوْ كَانَ مِنْ عِنْدِ غَيْرِ اللّٰهِ لَوَجَدُوْا فِيْهِ اخْتِلَافًا كَثِيْرًا

இந்த குர்ஆனை அவர்கள் ஆழ்ந்து கவனிக்க வேண்டாமா? இது அல்லாஹ் அல்லாதவரிடமிருந்து வந்திருந்தால் இதில் பல (தவறுகளையும்) முரண்பாடுகளை(யும்) அவர்கள் கண்டிருப்பார்கள். (அல்குர்ஆன் 4: 82)

எனவே அல்லாஹ்வை விடுத்து மக்களுடைய சிந்தனைகளை முன்வைத்தால் நிச்சயமாக அது பிரிவினையை தான் ஏற்படுத்தும். அல்லாஹ் மட்டும் தான் உள்ளங்களை ஒன்று சேர்ப்பவன், சுப்ஹானஹூ வதஆலா.

**இன்-ஷா அல்லாஹ்! தொடரும்..**